அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

## ஆண்டு 7

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 16

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தோர்
   1. பல்லவர்
   2. பாண்டியர்
   3. சோழர்
   4. நாயக்கர்

2. பெருங்குடி என்பதைப் பிரித்தெழுதினால்
   1. பெரும் + குடி
   2. பெருமை + குடி
   3. பெரிய + குடி
   4. பெருங் + குடி

3. இயற்கை என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   1. செயற்கை
   2. அழகு
   3. வெம்மை
   4. கருமை

4. குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் திரிந்து வறண்ட நிலம்
   1. பாலை
   2. குறிஞ்சி
   3. மருதம்
   4. முல்லை

5. ஓடுகின்றன என்பது
   1. அஃறிணை பலவின்பால் நிகழ்கால வினைமுற்று
   2. அஃறிணை பலர்பால் நிகழ்கால வினைமுற்று
   3. உயர்திணை பலவின்பால் நிகழ்கால வினைமுற்று
   4. அஃறிணை பலர்பால் எதிர்கால வினைமுற்று

6. அப்பா பல்லை நறநற எனக் கடித்தார். இதில் நறநற என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. இரட்டைக்கிளவி
   3. அடுக்கிடுக்குத்தொடர்
   4. இணைமொழி

| 1 | 2 | 3 | 4 |
| --- | --- | --- | --- |

7. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை மலேசியாவில் நடத்தியவர்
   1. மகாகவி து. உருத்திரமூர்த்தி
   2. தனிநாயகம் அடிகளார்
   3. விபுலாநந்த அடிகள்
   4. பாரதிதாசன்

8. புலம்பெயர் தமிழர் பண்பாட்டு அடையாளங்களைப் பேணி வருகின்றனர். இச்சொல்லியம்
   1. மெய்ப்பாட்டுச் சொல்லியம்
   2. வினாச்சொல்லியம்
   3. ஏவற்சொல்லியம்
   4. கூற்றுச்சொல்லியம்

9. காரேயுன் நீரையெல்லாம் கள்வன் கவர்ந்தானோ? இதில் கார் என்பது
   1. வானம்
   2. கடல்
   3. முகில்
   4. தண்ணீர்

10. தமிழருடைய சிறப்பான பழக்கவழக்கங்களுள் ஒன்று
   1. பொய்கூறுதல்
   2. தனித்துண்ணுதல்
   3. களவெடுத்தல்
   4. மூத்தோரை மதித்தல்

11. அமைப்பு அடிப்படையில் வினைச்சொற்களின் வகைகள்
   1. மூன்று
   2. இரண்டு
   3. நான்கு
   4. ஆறு

12. மாடு கத்தும் அதுபோல நாய்
   1. குரைக்கும்
   2. ஊளையிடும்
   3. உறுமும்
   4. பிளிறும்

13. ஓர் இனத்தின் அடையாளம்
   1. பழக்கவழக்கம்
   2. உணவு
   3. உடை
   4. மொழி

14. வன்னி வரலாற்றில் மண்விடுதலையும் வீரரின் வரலாறுகளும் கலந்துள்ளன. இதில் வந்துள்ள இடைச்சொல்
   1. வன்னி
   2. மண்
   3. உம்
   4. வரலாறு

15. தண்மை + நீர் என்பதைச் சேர்த்தெழுதினால்
   1. தன்னீர்
   2. தண்நீர்
   3. தண்ணீர்
   4. தந்நீர்

16. பிரித்தானியருக்கு அடிபணியாது ஆட்சிசெய்த மன்னன்
   1. எல்லாளன்
   2. கயிலாயவன்னியன்
   3. பண்டாரவன்னியன்
   4. சங்கிலியன்

17. அழகிய மங்கை செந்நிற மலரைக் கொய்தாள். இதில் வந்துள்ள எழுவாய் அடைமொழி
   1. செந்நிற
   2. அழகிய
   3. மங்கை
   4. கொய்தாள்

18. கவிச்சுவை சொட்டச்சொட்டப் பாடல்களைப் பாடுபவர்கள்
   1. புலவர்கள்
   2. அரசர்கள்
   3. வணிகர்கள்
   4. ஆசிரியர்கள்

19. தமிழினி மேடையில் இனிமையாகப் பாடினாள். இதில் வந்துள்ள வேற்றுமை உருபு
   1. ஐ
   2. ஆள்
   3. இல்
   4. இன்

20. அகப்பொருளைக் கருப்பொருளாகக் கொண்டு ஆடப்படும் கூத்து
   1. வடமோடிக்கூத்து
   2. தெருக்கூத்து
   3. வில்லுப்பாட்டு
   4. தென்மோடிக்கூத்து

21. சேரன் வரைந்த ஓவியம் முதலாவது பரிசைப் பெற்றது. இதில் வந்துள்ள பெயரெச்சம்
   1. ஓவியம்
   2. முதலாவது
   3. சேரன்
   4. வரைந்த

22. வன்னி நிலப்பரப்பின் தெற்கு எல்லை
   1. அநுராதபுரம்
   2. திருகோணமலை
   3. யாழ்ப்பாணம்
   4. வவுனியா

23. எதிர்கால வினைமுற்றுச் சொல்
   1. கட்டினான்
   2. கட்டுகிறான்
   3. கட்டுவான்
   4. கட்டுகிறார்கள்

24. இந்தியப் படைக்கு எதிராக ஈழத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவர்களுள் ஒருவர்
   1. அங்கயற்கண்ணி
   2. அன்னை பூபதி
   3. மாலதி
   4. இசைப்பிரியா

25. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன
   1. உரிச்சொற்கள்
   2. அடைமொழிகள்
   3. சொல்லிய உறுப்புகள்
   4. பெயர்ச்சொற்கள்

25x1 = 25 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.

1. படி

பெயர்: ____________________

____________________

வினை: ____________________

____________________

2. ஆடி

பெயர்: ____________________

____________________

வினை: ____________________

____________________

4x1 ½ = 6 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று என்பவற்றை எழுதுக.

| | | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று |
|---|---|---|---|---|
| 1. | அழி | | | |
| 2. | நட | | | |
| 3. | கடி | | | |

9x1 = 9 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பூநகரி தமிழரது தலைநகராகவும் வணிகநகராகவும் விளங்கியமைக்குச் சான்றுகள் இரண்டு எழுதுக.

2. சங்ககால இலக்கியங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?

3. தமிழரது மரபுவழி வழக்கம் யாது?

4. உடலுக்கும் உள்ளத்துக்கும் இன்பம் தருபவை எவை?

5. மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லியம் ஒன்று எழுதுக.

6. சொற்றொடரைச் சொல்லியமாக எழுதுக.
ஔவையார் தனிப் பாடல்களை

7. ஏவற் சொல்லியம் ஒன்று எழுதுக.

5 x2 = 10 புள்ளிகள்

## 5 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

அன்பு கொண்டாடிடு கண்ணே - உயிர்கள்
அத்தனையின் மேலும் மெத்தமெத்த நீயே (அன்பு...)

பெற்று வளர்த்தவர் அப்பா அம்மா - கூடப்
பிறந்து வளர்ந்தவர் அண்ணன் தம்பி
கற்றுக் கொடுத்தவர் பள்ளி ஆசான் - நம்மைக்
கண்டு மகிழ்ந்திடும் நண்பர் மீதே (அன்பு...)

துள்ளிப் பறந்து திரியும் சிட்டு - சிறிது
சோற்றைக் கண்டு வரும்அக் காக்கை
அள்ளிப் போட்ட உணவுக் காக - வாலை
ஆட்டி நன்றி காட்டும் நாய் மேல்
அன்பு கொண்டாடிடு கண்ணே!

- அழ. வள்ளியப்பா

1. துள்ளிப் பறந்து திரியும் பறவை எது?

______________________________

2. பெற்று வளர்த்தவர்கள் யாவர்?

______________________________

3. உணவுக்காக வாலை ஆட்டி நிற்கும் விலங்கு எது?

______________________________

4. நம்மைக் கண்டு மகிழ்பவர் யார்?

______________________________

5. உயிர்கள் அத்தனை மேலும் எதைக் கொண்டாட வேண்டும்?

______________________________

5x2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

**தமிழ்:**

1. திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
2. அக்கா தொடருந்தில் வேலைக்குச் சென்றார்.
3. சிறுவர்கள் பூங்காவில் காற்பந்து விளையாடுகிறார்கள்.
4. நான் உறவினர்களுடன் தமிழில் கதைப்பேன்.
5. ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்கின்றனர்.

**வாழிடமொழி:**

1. ____________________

____________________

2. ____________________

____________________

3. ____________________

____________________

4. ____________________

____________________

5. ____________________

____________________

5x2 = 10 **புள்ளிகள்**

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. வன்னி
2. கூத்து
3. நான் வாழும் நாடு

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - அமைவிடம்
   - காலநிலை
   - வாழ்க்கை முறை
4. நான் கண்ட கனவு

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - கனவுகளின் வகைகள்
   - எனது கனவு
   - ஏற்பட்ட உணர்வு

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

உணவு, உடை, உறையுள் என்பன மக்களின் அடிப்படைத் தேவைகளாகும். இவற்றுள் உணவு என்பது ஓர் உயிரினம் வாழ்வதற்கு இன்றியமையாததாக விளங்குகிறது. உணவு என்று சொல்லும்போதே நாம் சுவையைப் பற்றிச் சிந்திக்கிறோம். நாம் அன்றாடம் பல்வேறு உணவு வகைகளையும் சிற்றுண்டிகளையும் உண்கிறோம். இவை ஒவ்வொன்றும் கசப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு போன்ற வெவ்வேறு சுவைகளைக் கொண்டுள்ளன. எமது நாக்கு சுவைகளைப் பிரித்து அறியும் ஆற்றலுடையது. சில உணவுகள் ஒன்றுக்கு மேற்பட்ட சுவைகளைக் கொண்டுள்ளன. புளிப்பும் இனிப்பும் உடைய தக்காளியை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். தமிழர் பெரும்பாலும் தங்கள் விழாக்களிலும் சிறப்பு நாள்களிலும் அறுசுவை உணவுகளைச் சமைப்பர்; அவற்றை விருந்தினர்க்கும் கொடுத்து மகிழ்வர்; உணவுக்குச் சுவையூட்ட ஏலம், கறுவா, கறிவேப்பிலை போன்ற நறுமணப் பொருள்களைச் சமைக்கும்போது சேர்த்துக் கொள்வர். அதனால் கிடைக்கும் மணம் உண்ணும் ஆவலைத் தூண்டுகிறது. உலகில் பரந்து வாழும் தமிழர் தமது உணவுப் பழக்க வழக்கங்களை இன்றும் பேணி வருகின்றனர்.

1. தமிழர் எப்பொழுது அறுசுவை உணவுகளைச் சமைப்பர்?

______________________________

______________________________

2. நாக்குக்குரிய ஆற்றல் என்ன?

______________________________

______________________________

3. உணவுக்குச் சுவையூட்டும் நறுமணப் பொருள்கள் இரண்டு எழுதுக.

______________ ______________

4. தக்காளியின் சுவைகள் எவை?

______________________________

______________________________

5. உணவு ஏன் இன்றியமையாததாக விளங்குகிறது?

______________________________

______________________________

5x2 = 10 புள்ளிகள்

**2. அறிவித்தலை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✕ எனவும் அடையாளம் இடுக.**

**யாழ் கலைப்பள்ளி நடத்தும்**
**கலைத்திறன் போட்டிகள் - 2025**

அன்புடையீர்!

கலைஞர்களின் திறமையை வெளிக்கொண்டுவரும் நோக்கில் கீழ்க்காணும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

- தனிநடனம்
- குழுநடனம்
- தனிப்பாடல்
- குழுப்பாடல்

இடம்: யாழ்நுண்கலை மண்டபம்
காலம்: 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை 10:00 மணி
தொடர்புகளுக்கு: 00 94 6554906

1. யாழ்நுண்கலை மண்டபத்தில் போட்டிகள் நடைபெற உள்ளன. ( )

2. இப்போட்டிகள் சனிக்கிழமை நடைபெறும். ( )

3. இப்போட்டியில் வில்லுப்பாட்டும் இடம்பெறும். ( )

4. யாழ் கலைப்பள்ளியால் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ( )

5. கலைஞர்களின் பொழுதுபோக்குக்காக இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ( )

5x1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 09 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |